**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் - 2020**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தபானத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனம் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.1 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இணக்கமற்ற கட்டுபாட்டு கணக்குகள் மற்றும் பதிவுகள்

| உருப்படி | நிதிக் கூற்றுக்களின் படி | தொடர்புடைய பதிவின் படி | வித்தியாசம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சாஸ் பி கெய்லிஸ் கோ லிமிடெட் | 599,718 | 1,075,783 | (476,065) | கூட்டுத்தாபனம் ஒரு முழுமையான முறைமை கல்வியை மேற்கொள்ளும் மற்றும் ஒரு மூலத்தில் இருந்து இரண்டு முறைமைகளும் தரவை கைப்பெற்றும் இணக்கமான அமைப்பை அறிமுகப்படுத்தும் சாத்தியத்தை எதிர்பார்க்கும். | மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| சிபிஎல் நச்சுரல் புட் பிறைவேட் லிமிடெட் | (1,720,780) | (1,440,354) | (280,426) | | |
| றோயல் பேர்ன்வுட் போர்சிலைன் | (258,072) | (112,354) | (145,718) | | |
| வரையறுக்கப்பட்ட அல்ரா கார்ப் | 109,389 | 115,202 | (5,813) | | |
| வரையறுக்கப்பட்ட எச்ஜேஎஸ் காண்டிமென்ட் | 1,360,505 | 1,609,843 | (249,338) | | |
| | | | 1,157,360 | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளபெறகூடிய நிதி சேவைகளுக்கான வற் ரூபா 2,158,511 தொகையானது மீட்கப்படாமல் 03 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது. | உள்நாட்டு இறைவரி திணைக்களம் இதை திருப்பி தர வேண்டும் என்று அறிவித்துள்ள்து.ஆனால் கூட்டுத்தாபனம் கணக்காய்விற்காக காத்திருந்தது.மற்றும் பணத்தை விடுவிப்பதற்கு உள் செயல்முறை முடிவடைந்தது. | நிலுவை தொகையை மீளப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) ஏற்றுமதி கட்டணத்தில் தள்ளுபடி வசதிகளின் முற்பணம் ரூபா 34,958,636 தொகையானது 10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது.இந்த முழு தொகைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. | மொத்த தொகையான ரூபா 34,958,636 அறவிடமுடியா கடனாக வழங்கப்பட்டது.ஆனால் கூட்டுத்தாபனம் இந்த தொகையை ஐந்தொகையில் முழுமையாக பதிவழிக்காமல் பராமரிக்கப்படுகின்றது.ஏனெனில் குறைந்த பட்ச மீள பெற கூடிய தொகையானது எதிர்கால குறிப்புக்காக வேறு சில வசதிகள் காரணமாக சில மீள பெறகூடிய வாய்ப்புகளை தூண்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. | நிலுவையாக உள்ள மீதிகளை மீள பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 32 மிகைப்படுத்தல்கள் மற்றும் 05 குறைபாடுகள் முறையே ரூபா 1,518,436 மற்றும் ரூபா 82,310 ஆகியவை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமல் 03 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. | இந்த வாடிக்கையாளரிடமிருந்து நிலுவை தொகை பெற நிலுவையில் இல்லை என்பதை சரி பார்த்த பிறகு மேற்கூறப்பட்ட நிலுவை தொகையை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) அத்தியாயம் ஆ இன் பந்தி13.3 | நிரந்தர நியமனம் செய்யப்படும் வரைக்கும் மட்டுமே தற்காலிக நியமனம் மேற்கொள்ள வேண்டிய போதிலும்,முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவி 10 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக இருந்தது.மற்றும் 31 டிசம்பர் 2020 வரை கொடுப்பனவாக ரூபா 1,054,900 செலுத்தப்பட்டது. | திட்டமிட்டபடி ஒரு ஆலோசனை நிறுவனத்தின் உதவியுடன் கூட்டுதாபனத்தின் முழு மனித வள செயற்பாட்டின் ஒழுங்கு முறையாக காணப்படும். தேவையான வெற்றிடங்களை நிரப்ப கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கும். | தாபன விதிக் கோவையுடன் இணங்க வேண்டும். |
| (ii) அத்தியாயம் ஏ இன் பந்தி 10 | நிறைவேற்று அதிகாரிகளிற்கான விடுமுறை கொடுப்பனவு ஆகக்குறைந்தது 8 மணித்தியாலத்திற்கு தேவைப்பட்ட போதிலும்,கூட்டுத்தாபனம் 8 வேலை மணித்தியாலத்திற்கு குறைந்த வேலை மணித்தியாலத்திற்கு விடுமுறை கொடுப்பனவாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முறையே ரூபா 789,247 மற்றும் ரூபா 462,076 செலுத்தப்பட்டது. | கூட்டுத்தாபனம் 12.08.1994 திகதியிட்ட நிர்வாக சுற்றறிக்கை இல 5 இனை விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்கான கொடுப்பனவிற்காக பின்பற்றுகிறது. | தாபன விதிக் கோவையுடன் இணங்க வேண்டும். |
| (ஆ)பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) 17 ஆகஸ்ட் 2015 திகதியிட்ட இல 21/2015 | ஊழியரிடம் இருந்து திரும்பி பெற கூடிய முறையில் வருடாந்த விழா முற்பணமாக ரூபா 10,000 கொடுக்கப்பட கூடிய வேளையிலும்,கூட்டுத்தாபனம் ஊழியர்களிற்கு நிதி உதவி அடிப்படையில் மீளப்பெற முடியாதவாறு ரூபா 52,000 செலுத்தி இருந்தது.கூட்டுத்தாபன் | எஸ்எல்இசிஜசி சட்டத்தின் படி அத்தகைய கொடுப்பனவுகளை அங்கிகரிக்க அதிகாரம் பெற்ற குழுவின் அனுமதியுடன் இந்த கட்டணத்தை செலுத்துவது பல வருடங்களாக கூட்டுத்தாபனத்தின் நடைமுறையாகவும் வழக்கமாகவும் இருந்தது. | காலத்திற்கு காலம் வழங்கப்படும் சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரியின் அனுமதியின்றி 2019 ஆம் ஆண்டிற்கான மீதி கொடுப்பனவாக ரூபா 879,750 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,716,000 கொடுப்பனவு செலுத்தி இருந்தது. | | |
| (ii) 31 டிசம்பர் 2008 திகதியிட்ட இல 30/2008 | ஆதிக பட்ச கடனாக ரூபா 250,000 அல்லது 10 மாத அடிப்படை சம்பளத்தில் இருந்து குறைவான தொகைக்கு இடர் கடன் செலுத்தப்பட வேண்டுமென்றாலும்,கூட்டுத்தாபனம் செல்லுபடியாகும் மட்டத்திற்கு மேலாக ஊழியர்களிற்கு கடன் வழங்கியது. | கூட்டுத்தாபனம் இந்த சுற்றறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை ஏனெனில் இந்த சுற்றறிக்கையின் நோக்கம் எஸ்எல்இசிஜசி ற்கு பொருந்தாது.ஏனெனில் கூட்டுத்தாபனம் நிதிக்காக தேசிய பாதீட்டில் தங்கியிருக்கவில்லை மற்றும் கடன்கள் அதன் சொந்த நிதியிலிருந்து வழங்கப்படவில்லை. | காலத்திற்கு காலம் வழங்கப்படும் சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும். |
| (iii)24 ஜனவரி 2018 திகதியிட்ட இல 02/2018 | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை மேலும் 09/06/2020 அன்று 02/2020 இயக்குனர் சபை கூட்டத்திற்கு ஊழியர்களிற்கான செயல்திறன் மதிப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று இயக்குனர் சபை கூறியது. | தேலையான ஊழியர்கள் இல்லாததால், நீண்டகாலமாக செயலிலந்த கூட்டுத்தாபனத்தின் மனிதவள செயற்பாட்டை நெறிப்படுத்தல்மற்றும் ஒழுங்குபடுத்தும் நோக்கில் கூட்டுத்தாபனம் கையாள ஒரு பொருத்தமான ஆலோசனை நிசூறவனத்தின் சேவைகளை கருத்தியல் ரீதியாக அனுமதி அளித்தது.மற்றும் 03.05.2021 அன்று நடைபெற்ற கூட்ட எண் 04.˙.2021 இல் அனைத்து ஒழுங்கு முறை தேவைகள் உட்பட நீண்டகாலமாக நிலுவையில் உள்ள அனைத்து மனிதவள விடயங்களையும் முடிக்கும்.அகன்படி நிலுவையில் உள்ள அனைத்து மனிதவள பிரச்சனைகளையும் தீர்க்கும் ஒரு விரிவான மனிதவள முறைமையை கூட்டுத்தாபனம் நிறுவ உத்தேசித்துள்ளது. | முனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (இ)02ஜீன் 2003 திகதியிட்ட பொது முயற்சியாண்மை சுற்றறிக்கை இல பிஇடி 12/2003 | | | |
| (i)அத்தியாயம் 3.7.5 | முறைமை மற்றும் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கும், உண்மையான | கூட்டுத்தாபனம் வணிகரீதியான முயற்சியாக செயற்பட எதிர்பார்க்கிறது.மற்றும் | கூட்டுத்தாபனம் அறிவுறுத்தலுடன் இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் நியாயமான முறையில் செயற்பாடுகள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் சிரேஸ்ட முகாமைத்துவ குழு உள்ளக கணக்காய்வு முகாமையாளரை கொண்டிருக்க வேண்டிய போதிலும்,உள்ளக கணக்காய்வாளரிற்கு பதவி அனுமதிக்கப்பட்ட ஆளனி இல்லை.இருப்பினும், கூட்டுத்தாபனம் உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை வெளிநபரிடம் கொடுத்து 2020 ற்காக ரூபா 616,480 செலவிட்டது.மீளாய்வாண்டில் காலாண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | பொறுப்புகளை சந்திக்க அதன் சொந்த நிதியை உருவாக்க வேண்டும்.இந்த சூழலில் முகாமைத்துவம் மற்றும் இயக்குனர்சபை எப்பொழுதும் எந்த ஒரு தெரிவுகளையும் கூட்டுதாபனத்தின் செலவுகள் மற்றும் நன்மைகளின் அடிப்படையில் மதிப்பிடுகிறது.செலவுகள் தொழில்முறை குழுவால் வழங்கப்படும் சிறப்பு சேவை போன்றவற்றை கருத்தில் கொண்டு உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை வெளியாரிடம் ஒப்படைப்பது பொருளாதார ரீதியாக நன்மையளிக்கும் என்று கூட்டுத்தாபனம் உணர்ந்திருந்தது.ஆகையால்,ஒரு தனி உள்ளக கணக்காய்வு பிரிவு வைத்திருக்கும் விருப்பம் சாதகமான பரீசிலனைக்கு இதுவரை இடமளிக்கவில்லை மற்றும் தற்போதைய ஏற்பாடுகள் நிறுவனத்திற்கு நன்றாக வேலை செய்கிறது. | வேண்டும். |
| (ii) அத்தியாயம் 5 | வருடாந்த செயல்திட்டம்,வருடாந்த பாதீடு,வருடாந்த பெறுகைகள் திட்டம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிறுவன திட்டம் நிதி ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு அங்கிகரிக்கப்பட வேண்டுமென்றாலும்,அது செய்யப்படவில்லை | ஒக்டோபர் 2019 இல் இருந்து பெப்ரவரி 2020 இறுதி வரை கூட்டுத்தாபன இயக்குனர் சபை கூட்டத்தை நடத்துவதற்கு தேவையான இயக்குனர் சபை இல்லாமை என்பது குறிப்பிடத்தக்கது.2019 ஆம் ஆண்டின் இறுதிகூட்டம் 16.09.2019 அன்று நடைபெற்றது மற்றும் 2020 ஆம் ஆண்டின் முதல் கூட்டம் 27.02.2020 நடைபெற்றதில் இருந்து இது தெளிவாகிறது.குறிப்பிட்ட ஆவணங்கள் 2020 ஆம் ஆண்டில் முதல் கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன ஆனால் செயல்திட்டம் மற்றும் பாதீட்டில் சபையால் முன்மொழியப்பட்ட சில திருத்தங்கள் காரணமாக அனுமதி ஒத்தி வைக்கப்பட்டது.2020 செப்ரெம்பர் வரை சபையால் கூட்டுதாபனத்தின் குறிப்பிட்ட ஆவணங்களை அனுமதி வழங்கும் நிலையில் இல்லை. | கூட்டுத்தாபனம் அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii)அத்தியாயம் 6.5.3 | நிதியாண்டின் இறுதி திகதியிலிருந்து 150 நாட்களுக்குள் அமைச்சரவையின் அனுமதியை பெற்ற பிறகு வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும்,2017,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மேற்கூறிய காலத்திற்குள் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்படவில்லை. | சில நீடிப்புகளிற்கு கூட்டுதாபனத்தில் தாமதம் ஏற்பட்டது ஆனால் மொத்த தாமதம் கூட்டுதாபனத்தால் ஏற்படவில்லை. | கூட்டுத்தாபனம் அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |
| (iv) அத்தியாயம் 9.3 | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்படவில்லை. அதன்படி 15 ஆண்டுகளுக்கு மேலாக வேலை அனுபவம் உள்ள ஊழியர்கள் பதவி உயர்வுக்கான சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர். | இந்த திட்டங்கள் அனைத்தும் மொத்த மனித வள முறைமையை நிறைவு செய்வதன் மூலம் அமைக்கப்படும். | கூட்டுத்தாபனம் அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |
| (ஈ) 14 ஆகஸ்ட் 2017 திகதியிட்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் சுற்றறிக்கை எண் என்/எஸ்/எஸ்டிஜி/17 | நிலைத்து நிற்கும் குறிக்கோள் மற்றும் இலக்குகளை குறிகாட்டிகளாக அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனம் தனது நிலையான குறிக்கோளை அதன் பஸேஜ் உத்தரவாதத்தை (எபிஎஆர்எ) செயல்படுத்துவதன் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களிற்கு வங்கிகளில் இருந்து புறப்படுமுன் நிதி தேவைகளை பெறுவதற்கு உதவியை வழங்குகிறது.இதன் மூலம் நாட்டின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் முக்கியதாக கருதப்படும் வறுமை ஒழிப்பு செயற்பாட்டில் நேரடியாக ஈடுபடுகிறது. | நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் குறிக்கோளின் வினைத்திறனை மதிப்பிடுவதற்கு கூட்டுத்தாபனம் குறிகாட்டிகளை அடையாளம் காண வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 223,348,932 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 242,250,845 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 18,901,913 தொகையான சரிவு அவதானிக்கப்பட்டது. மொத்தமாக எழுதப்பட்ட மதிப்பீட்டு காப்பீடு வருமானத்தில் குறைவு மற்றும் ஏற்றுமதியை கட்டுபடுத்துவதன் மூலம் கோவிட் 19 காரணமாக நிகர உரிமை கோரல்களில் அதிகரிப்பு சரிவுக்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுதாபனத்தின் கணக்கியல் முறைமை மற்றும் செயற்பாட்டு முறைமை ஒன்றோடு ஒன்று இணைக்கப்படவில்லை. இரண்டு முறைமையில் வித்தியாசத்தின் படி வாடிக்கையாளர் நிலுவை ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றன. | இறுதியாக இரண்டு முறைமைகளும் இணக்கமான தளத்தில் பொதுவான தகவலை உருவாக்க இணைக்கப்படும் வகையில் படிப்படியாக முறைமையை மேம்படுத்த கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கும். | ஐரி முறைமையை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 4 ஆண்டுகளில் 59 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக செயற்பாடுகளின் வருமானம் குறைவடைந்துள்ளது மற்றும் கூட்டுதாபனத்தின் முதலீடுகளின் வருமானம் மொத்த வருமானத்தில் 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையில் காலத்தில் வளர்ச்சியை காட்டுவதாக அவதானிக்கப்பட்டது. | 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 இல் செயற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமான ரூபா 13.79 மில்லியன் செலுத்தப்பட்ட கோரிக்கைகளின் திருப்பி செலுத்துவதில் கணிசமான வீழ்ச்சி காரணமாக இருந்தது.இந்த வருமானத்தின் உருவாக்கம் கூட்டுதாபனத்தின் கட்டுபாட்டில் வராது.கோவிட் 19 இன் எதிர்மறையான தாக்கத்தால் அனைத்து செயல்பாட்டு வருமானத்திலும் பொதுவான வீழ்ச்சியால் சில மாதங்களில் நாட்டில் ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல் இல்லாமையால் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020 இல் செயற்பாட்டு வருமானம் வீழ்ச்சியடைந்தது. | செயற்பாடுகளிலிருந்து வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ)31 டிசம்பர் 2020 இன் படி,ரூபா 241,807,798 தொகையான நிலுவையிலுள்ள 06 ஈட்டு விண்ணப்பங்கள் இருந்தன.அதில் 02 விண்ணப்பங்கள் 2019 இல் பெறப்பட்ட ரூபா 19,487,887 பெறுமதியான 02 விண்ணப்பங்கள் | 2019 ற்கான 02 கோரிக்கைகளும் ஏற்றுமதியாளரால் சமீபகாலம் வரை சமர்ப்பிக்கப்படவில்லை.எனவே இந்த கோரிக்கை கைவிடப்பட்டது.இருப்பினும் தகவல் பெறப்பட்டதால்,உரிமை கோரல் அடுத்த சபை கூட்டத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.2020 இல் தாக்கல் செய்யப்பட்ட பிற | தற்போதுள்ள கோரிக்கையை செலுத்தும் செயல்முறையை விரைவு படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| இன்னும் தீர்க்கப்படவில்லை. | கோரிக்கைகள் தொடர்பாக அடுத்த சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.மற்ற மூன்று உரிமை கோரல்கள் இன்னும் செயல்படுத்தப்படுகின்றன. | |

## 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)கூட்டுதாபனம் ஊழியர்களிற்காக 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்காக விடுப்பு பணமாக ரூபா 1,245,556 மற்றும் ரூபா 1,520,509 செலுத்தப்பட்டது.எனினும் அதே நேரத்தில் கூட்டுத்தாபனம் ரூபா 208,969 மற்றும் ரூபா 121,984 வரவு ஊக்குவிப்பாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக செலுத்தியது.அதன்படி, கூட்டுதாபனம் ஒரே நோக்கத்திற்காக இரண்டு நன்மைகளை செலுத்தியது. | பயன்படுத்தப்படாத விடுமுறை விடுப்பு பணம் வழங்கப்படுகிறது.மற்றும் வரவு ஊக்குவிப்பு தொகையானது ஊழியர்கள் குறைந்த பட்ச தொகைக்கு தகுதிபெற ஆக்ககுறைந்து 15 நாட்களுக்கு சரியான நேரத்தில் வேலைக்கு சமூகமளிப்பதற்கு வழங்கப்படுகிறது. | ஒரு நோக்கத்திற்காக ஒரு நன்மையை மட்டுமே செலுத்த வேண்டும். |
| (ஆ) 2012 மே முதல் ஒரு ஊழியர் இடைநீக்கம் செய்யப்பட்டு அரை மாத சம்பளமாக ரூபா 19,480 வழங்கப்பட்டது.மற்றும் 31/12/2020 வரை அந்த ஊழியரிற்கு ரூபா 2,006,440 வழங்கப்பட்டது.மீளாய்வாண்டில் இறுதிக்குள் ஒழுங்கு நடவடிக்கை செயல்முறையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த ஊழியர் தொடர்பான விசாரணை இன்னும் முடிக்கப்படவில்லை.இது 03.05.2021 அன்று நடைபெற்ற கடைசி இயக்குனர் சபை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. | ஒழுங்கு நடவடிக்கை நடைமுறையை விரைவு படுத்த வேண்டும். |